02.02.2026

O.S.No.32/2014

வா.சா.1.திருமதி. நாகரத்தினம், க.பெ.திரு. கோபால்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. பேங்க் காலனி 1வது தெரு அருகில் எனது வீடு உள்ளதா என்றால் பேங்க் காலனியில் தான் இருக்கிறேன். 1வது தெருவில் இருந்து மூன்று தெரு தாண்டி குடியிருக்கிறேன். வாதிக்கும், பிரதிவாதிக்கும் என்ன பிரச்சனை என்று வாதி சொல்லி தெரிந்து கொண்டேன். பேங்க் காலனிக்கு மேற்குப் பகுதியில் தென்வடலாக மதுரை – நத்தம் மெயின் ரோடு உள்ளதா என்றால் கிழக்குப் பக்கம் உள்ளது. வாதியின் சொத்தின் சர்வே எண்.404/10–என்றால் எனக்கு தெரியாது. வாதியின் வீடு தெரியுமா என்றால் தெரியும். வாதியின் வீட்டிற்கு மேற்குப் பகுதியில் தென்வடலாக மதுரை – நத்தம் மெயின் ரோடு செல்கிறது என்றால் ஆமாம். வாதியின் வீட்டிற்கு தெற்குப் பக்கம் பேங்க் காலனி 1வது தெரு மெட்டல் ரோடாக செல்கிறது என்றால் ஆமாம்.

2. வாதியின் வீட்டின் போர்ட்டிகோ தெற்கு புறமாக பேங்க் காலனி 1வது தெருவைப் பார்த்து உள்ளது என்றால் ஆமாம். வாதியின் வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் ஆமாம். வாதியின் வீட்டிற்கு மேற்கே 11வது எண் பிளாட் உள்ளது என்றால் எண் தெரியாது. ஆனால் பிளாட் உள்ளது. வாதியின் வீட்டிற்கு மேற்கே பகுதியில் உள்ள பிளாட்டில் வீடு கட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாதியின் வீட்டிற்கு கிழக்குப் பக்கமும் ஒரு பிளாட் உள்ளது என்றால் வீடு கட்டப்பட்டுள்ளது. கிழக்குப் பகுதி முழுவதும் வீடு உள்ளது.

3. தற்போது, தாவா சொத்தின் அமைப்புக் குறித்து எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும். வாதியின் வீட்டிற்கு மேற்குப் பக்கமும் காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்ட வீடுகள் உள்ளது என்றாலும், நான் வாதிக்கு ஆதரவாக இடம்

உள்ளது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் மேற்குப் பக்கம் உள்ள சொத்திற்கும், வாதியின் சொத்திற்கும் இடையே பாதை செல்வதற்காக இடம் விடப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. பொதுப்பாதை பஞ்சாயத்திற்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நாங்கள் ரோடு போட்டோம். எந்த எண்ணில் இடம் விடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. வாதியின் வீடானது சர்வே எண்.404/10–க்கும், வாதி வீட்டுக்கு மேற்குப் பக்கம் உள்ள சர்வே எண்.404/9–க்கும் இடையில் எவ்விதமான பொதுப்பாதையும் இல்லை என்றால் சரியல்ல. வாதியும் அவ்வாறு வழக்கை நடத்தவில்லை என்றால் சரியல்ல.

4. பேங்க் காலனி 1வது தெருவிற்கும் அடுத்த தெரு பேங்க் காலனி 2வது தெரு செல்கிறது என்றால் ஆமாம். பிரதிவாதிகள் பிளான் அப்ரூவல்படி பேங்க் காலனி 2வது தெருவைத் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும், பிரதிவாதிகளின் இடம் சர்வே எண்.403/7–என்றாலும் அது பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு, பிளாட் எண்.5, 6 மற்றும் பல பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றாலும், பிரதிவாதிகள் மூவரும் சேர்ந்து பிளாட் எண்.6யை வாங்கியுள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. சர்வே எண்.403/6, சர்வே எண்.403/7, சர்வே எண்.403/5 ஆகிய அனைத்துமே பேங்க் காலனி 2வது தெருவைத் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வாதி சர்வே எண்.404/10, சர்வே எண்.404/9, சர்வே எண்.404/11 மற்றும் அதைச் சார்ந்த பிளாட்டுகள் அனைத்தும், பேங்க் காலனி 1வது தெருவைத் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வாதிக்கு 1வது தெருவில் முன் வாசல் உள்ளது தெரியும். பின் பகுதியிலும், ரோடு உள்ளது. வாதி வீட்டிற்கு பின் பகுதியில் மரம் உள்ளதா என்றால் நிறைய மரங்கள் உள்ளது குறிப்பிட்டு சொல்ல முடியாது. தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றாலும், தாவா சொத்துக்கு கிழக்கு பகுதியில் உள்ள காம்பவுண்ட் சுவரை வாதி கடந்த 19.01.2014ம் தேதி உடைத்து

சேதப்படுத்தியதன்பேரில் 2ம் பிரதிவாதி ஊமச்சிக்குளம் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதன் பேரில் குற்ற எண்.85/2014 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு தற்போது, மதுரை, நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் CC.No.347/2016–ஆக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரியாது. 19.01.2014ம் தேதி சுவற்றை உடைத்துவிட்டு வாதி இந்த வழக்கை 28.01.2014ம் தேதி குற்ற வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நானும், வா.சா.2ம் வாதிக்கு வேண்டியவர் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் வார்டு மேம்பராக இல்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.